நாமக்கல் அரசியல் சமுதாய மாதமிருமுறை இதழ்

# தராசு

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

https://www.magzter.com/IN/Namakkal-Tharasu/Tharasu/Politics/

8 - 10
₹ 20
15.09.2025



## டிரம்ப் வரி விதிப்பால் தமிழ்நாட்டிற்கு எந்த தொழிலுக்கு பாதிப்பு?



# விஜயகாந்த் வாக்கு விஜய் கைப்பற்றுவாரா!

# தேமுதிக கலக்கம்?

அரவிந்தன்





# விஜய் எம்.ஜி.ஆர்–ஐ பின்பற்றுகிறாரா?

தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில மாநாட்டில் அக்கட்சியின் தலைவர் விஜய், சுமார் அரை மணிநேரம் தான் ஆற்றிய உரையில் பிரதானமாக மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆரை முன்னிறுத்தி பேசியிருக்கிறார். எம்ஜிஆர் 1977ல் பெற்ற வெற்றியை போன்று 2026 தேர்தலிலும் மாற்றம் நிகழும் என தொடர்ச்சியாக கூறி வருகிறார் விஜய்.

அதிமுகவின் நிலைமையை நினைத்து அதன் தொண்டர்களே கவலை கொள்வதாக விஜய் பேசியிருப்பதன் மூலம் அக்கட்சியின் வாக்காளர்களுக்கு அவர் வெளிப்படையாக குறிவைத்ததாக, அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர். உண்மையில், எம்ஜிஆரை முன்னிறுத்தும் விஜய், அவர் கூறுவது போன்ற அரசியல் மாற்றத்தை நிகழ்த்த முடியுமா? எம்ஜிஆருக்கு கிடைத்த வெற்றி அவருக்கு சாத்தியமா?

'வாகை சூடும் வரலாறு திரும்புகிறது, வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு' என்ற பெயரில் மதுரை பாரபத்தியில் தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு ஏராளமான தொண்டர்களும் நிர்வாகிகளும் வந்தனர். மாநாட்டில் பேசிய விஜய், ''எம்ஜிஆருடன் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. எம்ஜிஆரை மாதிரியே குணம் கொண்ட விஜயகாந்துடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவரும் மதுரையை சேர்ந்தவர்தான், அவரை மறக்க முடியாது. 1967, 1977ல் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதேபோன்று 2026ல் அப்படியொரு வரலாறு திரும்பப் போகிறது என்பதை உறுதியாக சொல்வதற்கான மாநாடு இது.'' என்றார்.

தன் பேச்சுக்கு நடுவே எம்ஜிஆரின் 'நான் ஆணையிட்டால்' பாடல் வரிகளையும் ஆங்காங்கே பாடினார். 'எதிர்காலம் வரும் என் கடமை வரும்' என்ற பாடல் வரிகளை பாடிய விஜய், "'மக்கள் அரசியல்' எனும் சவுக்கை பாசிச பாஜக, 'பாய்சன்' திமுகவுக்கு எதிராக கையில் எடுக்கலாமா?'' என கூட்டத்தை நோக்கி கேள்வி எழுப்பினார்.

1977ம் ஆண்டில் எம்ஜிஆருக்கு கிடைத்தது போன்ற வெற்றி சாத்தியமா என மூத்த அரசியல் நிபுணரிடம் பேசிய போது, "1977 போன்ற களச்சூழல் இப்போது இல்லை. அதுமட்டுமல்லாமல், எம்ஜிஆர் சினிமாவில் நடித்து மட்டும் அரசியலுக்கு வரவில்லை. அதிமுகவை தொடங்கும் முன் சுமார் 20 ஆண்டுகள் திமுகவுக்காக பணியாற்றியுள்ளார், பல பொறுப்புகளை வகித்துள்ளார். அதன்பின் தான் கட்சியை ஆரம்பித்து ஆட்சியை பிடித்தார். எம்ஜிஆர், அண்ணாவின் பயணம் நெடியது" என்றார்.

அரசியலில் வெற்றி பெற கருத்தியல் ரீதியாக பணியாற்றுவது, மக்கள் ஆதரவை பெறுவது முக்கியம் எனக்கூறிய சுகுணா திவாகர், எந்த தேர்தலையும் விஜய் சந்திக்கவில்லை என்றும் தேர்தலில் பணியாற்றிய அனுபவம் அவரின் தொண்டர்களுக்கு இல்லை என்றும் தெரிவிக்கிறார்.

"அரசியல் ரீதியாக பணியாற்றும் தொண்டர்களை உருவாக்கிய பின்பே எம்ஜிஆர் அரசியலுக்கு வந்தார். ஆனால், அவருடைய நிர்வாகிகளையே விஜய் பார்ப்பதில்லை என புகார் இருக்கிறது. விஜய் சினிமா போன்றே அரசியலை நினைக்கிறார். அவ்வப்போது மாநாடுகள், அறிக்கைகள் என இருக்கிறார். எல்லாவற்றுக்கும் வீட்டுக்குள்ளிருந்து செயல்படுகிறார். இது அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தாது. " என்கிறார் அவர்.

மேலும் அவர் கூறுகையில் 'திராவிட அரசியலின் எதிர்காலம்', 'அரசியல் சினிமாக்களும் சினிமாக்களின் அரசியலும்' உள்ளிட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். வீட்டுக்குள்ளிருந்து செயல்படுவதாக முன்வைக்கும் விமர்சனங்களுக்கு விஜய் தன்னுடைய உரையில் பதிலளித்திருந்தார்.

இதுகுறித்து மாநாட்டில் பேசிய விஜய், "'ஒரு சிங்கம் எப்போதும் தனித்துவம் வாய்ந்தது, சிங்கம் ஒருமுறை கர்ஜித்தால் 8 கிலோமீட்டருக்கு அதிரும். அப்படிப்பட்ட சிங்கம் வேட்டைக்கு மட்டும் தான் வெளியே வரும், வேடிக்கை பார்க்க வராது. சிங்கம் உயிருடன் உள்ள, பெரிய விலங்குகளையே தாக்கும், ஜெயிக்கும். உயிருள்ளாததை, கெட்டுப் போனதை தொடாது. அப்படிப்பட்ட சிங்கம் எதையும் தொடாது, தொட்டால் விடாது. சிங்கம் காட்டின் எல்லையை தானே வகுக்கும். கூட்டத்துடனும் இருக்கும், அஞ்சாமல் தனியே வரும். தனியாக இருந்தாலும் அது காட்டின் அரசாக இருக்கும். '' என்றார்.

"ஆனால், சிங்கம் யாரையும் தன் குகைக்கே வரவழைத்து வேட்டையாடுவதில்லை, விஜய் தான் இருக்கும் இடத்துக்கே மக்களை வரவழைத்து பேசுகிறார்" என விமர்சிக்கிறார் அவர். சினிமாவில் இருந்து வரும் எல்லோருக்கும் ரோல் மாடல் எம்ஜிஆர்தான் எனக் குறிப்பிட்டு அதற்கு உதாரணமாக விஜயகாந்தை குறிப்பிடுகிறார். "விஜயகாந்த் தனது படங்களில் தீவிர அரசியல் கருத்துகளை பேசியுள்ளார். ஆனால், விஜய் ஒரு வெகுஜன எண்டர்டெயினராக தான் இருந்திருக்கிறார்." என கூறினார்.

எம்ஜிஆருக்கு அடுத்து பல தலைமுறைகள் உருவாகிவிட்டது எனவும் இளைய தலைமுறை மத்தியில் இந்த 'எம்ஜிஆர் பிம்பத்துக்கு' என்ன தாக்கம் இருக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். "எல்லாரும் எல்லார் மாதிரியும் ஆகிவிட முடியாது. எம்ஜிஆர்விஜய் என இரண்டு காலகட்டமும் வேறு. அது விஜய்க்கு தெரியாமல் இல்லை. தொண்டர்களுக்கு உற்சாகம் அளிப்பதற்காக விஜய் அவ்வாறு பேசுகிறார். ஆனால், யதார்த்தம் அப்படியில்லை." என்கிறார் அவர்.

மாநாட்டில் பேசிய விஜய், ''இந்த ஆட்சியை பார்த்து நாம் எப்படி அமைதியாக இருக்க முடியும்? நீங்கள் (ஸ்டாலின்) நடத்தும் ஆட்சியில் யாருக்காவது பாதுகாப்பு இருக்கிறதா? தமிழ்நாட்டில் நடக்கும் ஊழல்களைப் பார்த்து 'வாயே இல்லாத வயிறு கூட சிரிக்கிறது'. பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதுமா? வெளியே செல்லும் இடங்களில் பாதுகாப்பு இல்லை என பெண்கள்

கதறுகின்றனர். அந்த கதறல் உங்களுக்குக் கேட்கிறதா? ஒட்டுமொத்தமாக எல்லோரும் சேர்ந்து திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.'' என்றார்.

ஆனால், ''பெண்கள், தாய்மார்கள், வயதானவர்களின் வாக்குகளை கவர்வதற்காக விஜய் என்ன செய்தார்? களத்திலும் சரி, சினிமாவிலும் சரி பெண்களுக்கான தலைவர் என்ற பிம்பம் விஜய்க்கு உருவாகவில்லை. ஆனால், அது எம்ஜிஆருக்கு இருந்தது. மூதாட்டிகளின் அன்பை எம்ஜிஆர் பெறுவது போன்ற புகைப்படங்கள் இப்போது வரை பிரபலம்.'' என்கிறார்.

யாருடைய வாக்குகளை விஜய் பெறலாம் என்ற கேள்விக்கு, ''புதிதாக யாராவது ஆட்சி வகிக்க வேண்டும் என்பவர்களும் முதல் தலைமுறை வாக்காளர்களும் விஜய்க்கு வாக்களிப்பார்கள். இது அதிமுகவுக்குதான் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில், முதல் தலைமுறை வாக்காளர்கள் அதிமுகவுக்கு ஆதரவு அளித்ததை கடந்த காலங்களில் பார்த்திருக்கிறோம். நாம் தமிழர் வாக்குகள் கணிசமாக விஜய்க்கு வரும். அவர் குறிவைக்கும் அதிமுக வாக்குகள் அவருக்கு வரலாம்.'' என்கிறார் அவர்.

''எம்ஜிஆரின் மாஸ் என்னவென்று எல்லோருக்கும் தெரியும். அவர் உயிருடன் இருக்கும்வரை ஒருவராலும் முதலமைச்சர் சீட் பற்றி கனவு கூட காண முடியவில்லை. 'எப்படியாவது சி.எம். சீட்டை எனக்கு தாருங்கள், என் நண்பர் வந்தவுடன் திரும்பித் தருகிறேன்,'' என தன் எதிரியைக் கூட மக்களிடம் கெஞ்ச வைத்தவர்.'' என மாநாட்டில் பேசினார் விஜய். மேலும், ''ஆனால், எம்ஜிஆர் ஆரம்பித்த கட்சியை கட்டிக் காப்பது யார்? அப்பாவி தொண்டர்களே அதை சொல்ல முடியாமல் வேதனையில் தவிக்கின்றனர். அந்த அப்பழுக்கற்ற தொண்டர்களுக்கு 2026ல் யாருக்கு ஓட்டு செலுத்த வேண்டும் என நன்றாகவே தெரியும். அதிமுக பாஜக கூட்டணி பொருந்தாக் கூட்டணி.

திமுக பாஜகவுடன் மறைமுக கூட்டணி வைத்திருக்கிறது. ஒரு ரெய்டு நடந்தால், டெல்லி சென்று ரகசிய கூட்டம் நடத்துகின்றனர் திமுகவினர். அந்த சந்திப்புக்குப் பிறகு அந்த பிரச்னை அப்படியே காணாமல் போயிருக்கும்.'' எனவும் பேசினார் விஜய். ''தொண்டர்கள் நல்ல முடிவு எடுக்க வேண்டும், தகுதியற்றவர்கள் கையில் அதிமுக இருக்கிறது எனக்கூறி அதிமுக வாக்குகளை நேரடியாக குறிவைத்திருக்கிறார் விஜய்.

நேரடியாக, மறைமுகமாக கூட்டணி இல்லை என இதன்மூலம் கூறியிருக்கிறார். விஜய் தனித்து நிற்பார் அல்லது அவர் தலைமையில் அணி அமையும். இதன்மூலம், எடப்பாடி பழனிசாமி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதிமுக வாக்கு வாங்கி அவ்வளவுதான் என்ற முடிவுக்கு வர முடியாது, ஆனாலும் அவர் கவனமாக இருக்க வேண்டும். ஒன்றுபட்ட அதிமுக பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதிமுக வாக்குகளில் விஜய்க்கு எவ்வளவு கிடைக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.'' என்றார்.

---



## சூடுபிடிக்கும் தேர்தல் களம்

# மதுரை வடக்கில் மல்லுக்கட்டும் விஜபிகள்!

2026 சட்டமன்ற தேர்தலுக்கு தமிழ்நாடு தயாராகி வரும் நிலையில் தமிழகத்தின் மையப் பகுதியான மதுரையில் தேர்தல் போட்டி சூடு பிடித்திருக்கிறது. குறிப்பாக முக்கிய தொகுதியான மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதியில் தற்போதியிலிருந்தே தேர்தல் வேலைகளை துவக்கி இருக்கின்றனர் திமுக, அதிமுக நிர்வாகிகள். திமுக தரப்பில் தளபதி, சௌந்தர், அதிமுக தரப்பில் சரவணன், பாஜக தரப்பில் சீனிவாசன் ஆகியோர் போட்டியிட தயாராகி வருகின்றனர்.

2026 தேர்தலுக்கு தமிழகம் தயாராகி வருகிறது. தேர்தலுக்கு இன்னும் ஒரு ஆண்டு இருந்தாலும் தற்போது வேலைகளை துவக்கி விட வேண்டும் என ஆர்வம் காட்டுகின்றனர் அரசியல் கட்சியினர். வழக்கம்போல திமுகவும், அதிமுகவும், பூத் கமிட்டி கூட்டங்கள், ஆர்ப்பாட்டம், போராட்டம் என கள அரசியல் செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் மூத்த முன்னோடிகள் தங்கள் தொகுதிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர். அந்த வகையில் மதுரை மாவட்டத்தில் இருக்கும் 10 தொகுதிகளிலும் தேர்தல் வேலைகள் சூடு பிடித்திருக்கிறது. ஏறக்குறைய தேர்தலுக்கு 10 மாதங்கள் இருக்கும் நிலையில் அதிமுக நிர்வாகிகள் தொண்டர்களை உற்சாகப்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

மதுரையை பொறுத்தவரை 10 சட்டமன்ற தொகுதிகள் இருக்கிறது. 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த போதும் அதிருப்தி நிலவிய போதும் 2021 சட்டமன்ற தேர்தலில் திமுகவும் அதிமுகவும் ஐந்து ஐந்து தொகுதிகளை பகிர்ந்து கொண்டது. அந்த அளவுக்கு மதுரை திமுகவுக்கும், அதிமுகவுக்கும் சம அளவில் ஆதரவாக இருக்கிறது. மதுரை மாவட்டத்தை பொருத்தவரை தமிழக அளவில் பிரபலமான பல முக்கிய முகங்கள் இருக்கின்றனர்.

திமுக தரப்பில் அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், அமைச்சர் மூர்த்தி, எம்எல்ஏ தளபதி, அதிமுகவில் ஆர்பி உதயகுமார், செல்லூர் ராஜு, ராஜன் செல்லப்பா, டாக்டர் சரவணன் என பலமான வேட்பாளர்கள் இருக்கிறார்கள். கூடுதலாக நாம் தமிழர், தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர்களும் களமிறங்குவார்கள். இந்த நிலையில் மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதியில் தற்போதே வேட்பாளர்கள் களம்இறங்க துவங்கி இருக்கின்றனர்.

மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியை பொறுத்தவரை சிறுபான்மையினர், யாதவர், பிள்ளைமார், முதலியார், முக்குலத்தோர், சவுராஷ்டிரா என அனைத்து சமுதாயத்தினரும் பரவலாக வசிக்கும் பகுதியாகும். மதுரையின் முக்கியப் பகுதிகளை இந்த தொகுதி உள்ளடக்கியிருப்பதால் இங்கு போட்டியிட திமுக, அதிமுக, உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளிலும் அந்தந்த கட்சிகளை சேர்ந்த வி.ஐ.பி.க்கள் களமிறங்க விரும்புகிறார்கள்.

திமுகவைவை பொறுத்தவரை தற்போதைய சிட்டிங் எம்.எல்.ஏ.வும், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளருமான தளபதி மீண்டும் போட்டியிட விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே இளைஞரணியை சே ர்ந்த ஒருவருக்கு இந்த முறை வாய்ப்பு வழங்கப்படும் என்ற பேச்சும் தொகுதிக்குள் பரவுவதால், எம்.எல்.ஏ. சீட் ரேஸில் மதுரை மாநகர் மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளரான சவுந்தரும் இடம் பிடித்திருக்கிறார். இதேபோல் அமைச்சர்கள் மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் ஆதரவாளர்கள் சிலரும் இந்த தொகுதியை குறிவைத்துள்ளனர்.

திமுகவில் இப்படி பலரும் சீட்டை எதிர்நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் காங்கிரஸ் கட்சிக்கும் மதுரை வடக்குத் தொகுதி மீது ஒரு கண் இருக்கிறது. ஏனெனில் ஏற்கனவே இந்த தொகுதியில் காங்கிரஸ் களமிறங்கியிருப்பது கவனிக்கத்தக்கது.

அதிமுக பாஜக கூட்டணியை பொறுத்தவரை மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட டாக்டர் சரவணன், பேராசிரியர் சீனிவாசன் ஆகியோர் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். கூட்டணியில் தொகுதியை பாஜகவுக்கு கொடுத்துவிடக் கூடாது என்பதில் டாக்டர் சரவணன் தரப்பு முனைப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது. டாக்டர் சரவணனமும் தற்போதே தேர்தல் பணிகளை துவக்கி விட்டார். ஆனால் பாஜகவோ இந்த முறை மதுரை வடக்கை அதிமுக கூட்டணியில் கேட்டுப் பெற வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழக வெற்றிக்கழகத்தை பொறுத்தவரை அக்கட்சியின் மாவட்டச் செயலாளரான விஜய் அன்பன் கல்லாணை என்பவர் போட்டியிடலாம் என சொல்லப்படுகிறது. நாம் தமிழர் கட்சியை பொறுத்தவரை கடந்த 2021 தேர்தலில் போட்டியிட்ட செந்தில்குமார் மீண்டும் களம்மிறங்கலாம் என சொல்லப்படுகிறது. மேலும் முதன்முறையாக மதுரை வடக்கு தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் பெண் வேட்பாளர்களை களம் இறக்கும் திட்டத்திலும் சீமான் இருக்கிறார் என்கின்றனர்.

ஜெய்பிரசன்னா



# கொங்கு மண்டலத்துக்கு குறி பாஜக போடும் அரசியல் கணக்கு சிபிஆர் வெற்றி பெறுவாரா?

இந்திய குடியரசு துணைத்தலைவர் பதவிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக தமிழகத்தைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டுள்ளார். தமிழக சட்டமன்ற தேர்தல் நெருங்குவதன் பின்னணியில் பாஜகவின் இந்த நகர்வு பல்வேறு யூகங்களுக்கு வித்திட்டுள்ளது. தொடர்ந்து 40 ஆண்டுகளாக பாஜவில் பயணித்ததற்கு வழங்கப்பட்ட பரிசு என்று அக்கட்சியினர் கூறுகின்றனர்.

இது நிச்சயமாக எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் தங்களுக்கு பலனளிக்கும் என்று அதிமுக தரப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது. தமிழகத்திற்கு குறிப்பாக கொங்கு மண்டலத்திற்கு எதையுமே செய்யாமல் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு பதவி கொடுப்பதால் மட்டும் தமிழக மக்களை ஏமாற்றிவிட முடியாது என்று திமுக கூறுகிறது.

குடியரசு துணைத்தலைவராக இருந்த ஜெகதீப் தன்கர் பதவி விலகலைத் தொடர்ந்து, வரும் செப்டம்பர் 9 ஆம் தேதி குடியரசு துணைத்தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மத்தியில் ஆளும் கூட்டணியான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக தமிழகத்தைச் சேர்ந்தவரும், மகாராஷ்டிரா ஆளுநருமான சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

திருப்பூர் சந்திராபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ராதாகிருஷ்ணன், கடந்த 1974 ஆம் ஆண்டிலேயே ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இணைந்து, அதன்பின் பாரதிய ஜனதா கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

குடியரசுத் துணைத் தலைர் வேட்பாளராக சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டது குறித்து பேசிய அவரது மூத்த சகோதரர் சி.பி.குமரேசன், ‘‘சிபிஆர் சிறு வயதிலேயே அரசியலில் இறங்கிவிட்டதால், குடும்பப் பொறுப்புகளை அவரிடம் சுமத்தியதேயில்லை. கட்சிக்காக அவர் செலுத்தியிருக்கும் உழைப்பு அசாத்தியமானது. வாஜ்பாய், அத்வானி காலத்திலிருந்து இப்போதுள்ள தலைவர்கள் வரையிலும் அனைவருடைய நம்பிக்கையையும் பெற்றிருப்பதே அவருடைய அர்ப்பணிப்புள்ள பணிக்கு ஓர் உதாரணம். அதற்கு வழங்கப்பட்ட பரிசாகத்தான் இதை நாங்கள் பார்க்கிறோம்.’’ என்றார்.

சி.பி.ராதாகிருஷ்ணன் 1996 ஆம் ஆண்டில் தமிழக பாஜக செயலாளராக நியமிக்கப்பட்டார். 2004 லிருந்து 2007 வரை தமிழக பாஜ தலைவராக அவர் பதவி வகித்துள்ளார்.

1998 மற்றும் 1999 ஆகிய இரு தேர்தல்களில் கோவையில் இருந்து நாடாளுமன்றத்திற்கு அவர் தேர்வானார். அதே கோவை தொகுதியில் 2004, 2014 மற்றும் 2019 ஆகிய நாடாளுமன்றத் தேர்தல்களில் சி.பி.ராதாகிருஷ்ணன் தோல்வியடைந்தார்.

சி.பி.ராதாகிருஷ்ணன் முதல் முறை தேர்தலில் நின்றபோது, இவருக்காக தேர்தல் பரப்புரைக்கு அத்வானி கோவை வந்தபோதுதான், 1998 பிப்ரவரி 14 அன்று கோவையில் குண்டு வெடிப்பு சம்பவம் நடந்து, 58 பேர் உயிரிழந்தனர். அந்தத் தேர்தலில் சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றார். அடுத்த 13 மாதங்களில் மத்தியில் ஆட்சி கவிழ்ந்ததால், அடுத்த ஆண்டில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணி வேட்பாளராக மீண்டும் வெற்றி பெற்று, 5 ஆண்டுகள் முழுமையாக கோவை நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

அப்போது நடந்த பல விஷயங்களை நினைவு கூர்ந்த திமுக சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினரும், முன்னாள் தமிழக அமைச்சருமான பொங்கலூர் பழனிசாமி, ‘‘குண்டு வெடிப்புக்குப் பின், கோவையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரவும், தொழில் வளர்ச்சியை மீட்டெடுக்கவும் திமுக ஆட்சியில் நாங்கள் பெரும் முயற்சிகளை எடுத்தோம். அப்போது எம்.பி.யாக இருந்து, எங்களுடைய எல்லா முயற்சிகளுக்கும் பக்கபலமாக இருந்தவர் சி.பி.ராதாகிருஷ்ணன்.’’ என்றார்.

‘‘தமிழக பாஜக தலைவராக சிபிஆர் இருந்த போதுதான், முதல்முறையாக 19 ஆயிரம் கி.மீ. பாத யாத்திரை நடத்தினார். எல்.முருகன் நடத்திய வேல் யாத்திரை, அண்ணாமலை நடத்திய ‘என் மண் என் மக்கள்’ யாத்திரை அனைத்துக்கும் அதுதான் முன்மாதிரியாக இருந்தது. பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்த போதும், 40 ஆண்டுகளாக கட்சியை விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து பணியாற்றியதற்கான அங்கீகாரமே இது.’’ என்றார் பாஜக மாநில பொதுச் செயலாளர் ஏ.பி.முருகானந்தம்.

கொங்கு வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன், திருப்பூரைச் சேர்ந்தவர் என்றாலும் கோவை நாடாளுமன்ற உறுப்பினராகவும், கயிறு வாரிய தலைவராகவும் பணியாற்றியவர். அவரை குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக்கியதன் மூலம் பாஜகவுக்கு எதிர் வரும் சட்டமன்றத் தேர்தலில் கொங்கு மண்டலத்தில் அரசியல் ரீதியாக கூடுதல் பலன் கிடைக்குமென்ற கணிப்பும் அவரது தேர்வுக்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது.

அரசியல் பார்வையாளர் கூறுகையில் ‘‘கொங்கு வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த அண்ணாமலையிடமிருந்து மாநிலத்தலைவர் பதவியைப் பறித்து, முக்குலத்தோர் சமுதாயத்தைச் சேர்ந்த நயினார் நாகேந்திரனிடம் கொடுத்தது, கொங்கு மண்டலத்தில் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பாஜவுக்கு தகவல் சென்றிருக்கும். அதனால் அந்த சமுதாயத்தினரிடையே ஒருவித அதிருப்தி இருந்ததும் தெரியவந்திருக்கும். இப்போது சிபிஆரை குடியரசு துணைத்தலைவராக தேர்வு செய்வதன் மூலமாக அதை ஈடு செய்ய பாஜ முயற்சி செய்கிறது.’’ என்றார்.

ஆனால் அரசியல்ரீதியாக இது தேர்தலில் பெரும் பலனைக் கொடுக்குமா என்பது சந்தேகமே என்று அவர் கூறினார். அதேபோல, சசிகலா, ஓ.பன்னீர் செல்வம் ஆகியோரை அதிமுகவில் புறக்கணித்து விட்டு, நயினார் நாகேந்திரனை பாஜ தலைவராக நியமித்ததால் மட்டுமே, தெற்கு மாவட்டங்களில் முக்குலத்தோர் சமுதாயத்தினரின் வாக்குகள் அதிமுக பாஜ கூட்டணிக்குக் கிடைத்துவிடும் என்று கணிப்பதும் தவறாகவே முடியும் என்கிறார்.

இதே கருத்தை எதிரொலிக்கும் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் (திமுக) ராஜ்குமார், ‘‘கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஒருவரை குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக அறிவித்ததில் மகிழ்ச்சி. ஆனால் தமிழகத்துக்கு குறிப்பாக கொங்கு மண்டலத்துக்கு கடந்த 10 ஆண்டு கால பாஜ ஆட்சியில் எதுவுமே செய்யாத நிலையில், ஒருவரை குடியரசு துணைத்தலைவராக மட்டும் நியமிப்பதால் தமிழகத்துக்கு எந்த பலனும் கிடைக்கப் போவதில்லை. அதை வைத்து தமிழக மக்களை ஏமாற்றவும் முடியாது.’’ என்றார்.





சி.பி.ராதாகிருஷ்ணன், கடந்த 2014 ஆம் கோவை நாடாளுமன்றத் தொகுதியில் பாஜக வேட்பாளராக போட்டியிட்ட போது, “பாஜ ஆட்சிக்கு வந்தால் கோவையில் மெட்ரோ ரயில் இயக்க மத்திய அரசிடம் நிதி பெற்றுத்தரப்படும். கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய நகரங்களை இணைக்கும் வகையில் மின்சார ரயில் இயக்கப்படும்“ என்று வாக்குறுதி அளித்திருந்தார்.

10 ஆண்டுகள் கடந்த பின்னரும் இந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில், தற்போது கோவை விமான நிலைய விரிவாக்கம் கோரிக்கையும் கூடுதலாகச் சேர்ந்துள்ளது.

அதைப் பற்றிக் கேள்வி எழுப்பும் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜ்குமார், ‘’பாஜக ஆட்சியில் ஜிஎஸ்டியால் தொழில்துறையினர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கோவை விமான நிலைய விரிவாக்கம் கொங்கு மண்டலத்தின் வளர்ச்சிக்கு முக்கியமான விஷயம். அதையும் செய்யவில்லை. ரயில் நிலைய மேம்பாடு, புதிய ரயில்கள் கோரிக்கை, கிழக்கு புறவழிச்சாலை என கொடுத்த வாக்குறுதி எதையுமே நிறைவேற்றாமல் ஒரே ஒருவருக்கு பதவி கொடுப்பதால் மட்டும் கொங்கு மண்டலத்துக்கும் தமிழகத்துக்கும் என்ன பலன் கிடைத்துவிடும்.’’ என்கிறார்.

இந்த கருத்துகளை மறுக்கும் அதிமுக மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி, ‘’அப்துல் கலாமுக்குப் பின், தமிழரான ஒருவருக்கு இவ்வளவு பெரிய பதவி கிடைப்பது எல்லோராலும் கொண்டாடப்பட வேண்டிய விஷயம். அதிலும் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இந்த பொறுப்பைக் கொடுப்பதற்காக பிரதமருக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். இது தமிழர்கள் அனைவருக்குமான பெருமை என்பதால் தமிழக மக்கள் இதை நிச்சயம் ஆதரிப்பார்கள்.’’ என்றார்.

‘’வரும் சட்டமன்றத் தேர்தலில் இது எங்கள் கூட்டணிக்கு பெரும் பலத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறோம். நான் சிபிஆருடன் 4 தேர்தல்களில் பணியாற்றியிருக்கிறேன். அவர் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அந்தப் பொறுப்பை வைத்து தமிழகத்துக்கு பல நல்ல திட்டங்களைச் செய்திருக்கிறார். அதேபோல இப்போதும் விமான நிலைய விரிவாக்கம், கோவை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு நிதியுதவி போன்ற பல திட்டங்கள் நிறைவேற்ற அவர் பேருதவியாக இருப்பார்.’’ என்றும் எஸ்.பி.வேலுமணி நம்பிக்கை தெரிவித்தார்.




# ஞானமணி கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் தி.அரங்கண்ணல்லுக்கு அடுத்த தலைமுறை கல்விப் பயிற்சியாளர் விருது

கோவையில் நடைபெற்ற விழாவில ஐசிடி அகாடமி சார்பில் நாமக்கல் மாவட்டம் ஞானமணி கல்வி நிறுவன தலைவர் டாக்டர் தி.அரங்கண்ணல்லுக்கு அடுத்த தலைமுறை கல்விப் பயிற்சியாளர் விருதினை தமிழக அரசு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் விருதினை வழங்கினார்.

இந்த விருதானது வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு கல்விச் சூழலை வடிவமைத்ததற்காகவும், கல்வித் துறையில் தொலைநோக்கு தலைமைத்துவத்திற்காகவும் இவ் விருது வழங்கப்பட்டது.

விருத பெற்ற தலைவர் டாக்டர் தி.அரங்கண்ணல்லுக்கு ஞானமணி கல்வி நிறுவனங்களின் தாளாளர் பி.மாலாலீனா, துணைத் தாளாளர் மதுவந்தினி அரங்கண்ணல், முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர். பி.பிரேம்குமார், ஞானமணி தொழில்நுட்ப கல்லூரியின் நிர்வாக இயக்கநர் முனைவர் எம்.மாதேஸ்வரன், முதல்வர் முனைவர் பி.சஞ்செய் காந்தி மற்றும் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

தராசு

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

வெளியிடுபவர் & ஆசிரியர்
**கே.ஷண்முகஷ்யாம்**

இணை ஆசிரியர்
**பூங்குன்றன்**

உதவி ஆசிரியர்
**இராஜா சத்ரபதி**

நிருபர்கள் குழு
**ஜெய் பிரசன்னா
சோழன் இராஜராஜன்
அரவிந்தன் பாண்டியன்
அபர்ணா சுபாஷ் தீபக்
நாடியா நிகாத் நிவேதா
ஜெசிக்கா**

இதழ் வடிவமைப்பு
**கல்யாண்குமார்**

புகைப்பட கலைஞர்
**பாலு வெங்கடேஷ்**

Printed and Published & Owned by K.Shanmugam Printed at Tharasu Printer and Binders from No.5/88, Main Road, Keerambur (Po.), Namakkal (Dt.) - 637 207. Tamilnadu.
Head Office : Chennai
Admin Office : Namakkal
Editor K.Shanmugam Shayam

All Rights Reserved legal jurisdiction Namakkal city Court only. Nothing in tharasu is intended to defame any person but is expressed in Good faith pursuit of truth and public good.

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
www.magzter.com
Per Issue Only ₹.20/-
Annual Subscribtion
Only ₹.480/-
Cell : 88078 73200
E-mail : namakkaltharasu@gmail.com
https://www.magzter.com/IN/Namakkal-Tharasu/Tharasu/Politics/
TAMIL NADU | AMERICA | SINGAPORE | ENGLAND | CANDA & AUSTRILIYA

இதழிலில் வெளியாகும் செய்திகள் அனைத்திற்கும் PRB சட்டப்படி ஆசிரியர் குழுவே பொறுப்பு








# மண் கடத்தலில் ஆளும்கட்சி மாஃபியாக்கள் அச்சத்தில் அரசு ஊழியர்கள்

தமிழகத்தில் சமீப காலமாக மணல் கொள்ளை, தடுக்கும் கிராம நிர்வாக அலுவலர்களை கொலை செய்யும் நோக்கத்தோடு வீடு புகுந்து தாக்குவது அவர்களை தகாத வார்த்தளால் திட்டுவது அதிகரித்து வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சட்ட விரோதமான கிராவல் மண் அள்ளியதை தடுத்த பாலமேடு கிராம நிர்வாக பெண் அதிகாரியை மண் கடத்தல் கும்பல் வீடுபுகுந்து தாக்குதல் நடத்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது சம்பந்தமாக புகார் அளித்த கிராம நிர்வாக அதிகாரியின் வாக்குமூலத்தில் சொன்னபடி தாக்குதல் நடத்தியவர்கள் முத்துக்குமார் மற்றும் கிருபாகரன் இருவர் மீதும் புகார் அளிக்கப்பட்டது ஆனால் முத்துக்குமார் மீது வழக்கு பதிவு செய்யாமல் அவரை காப்பாற்ற காவல் துறை காலம் கடத்தி வருகிறது.இதனால் கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் மாவட்ட ஆட்சியர் வளாக அலுவலகம் முன்பாக தர்ணாவில் ஈடுபட்டு பணிபாதுகாப்புக்கு உத்திரவாதம் கேட்டு போராடும் சூழலைப் பார்க்கும் போது சட்ட விரோத கும்பலின் கைகள் ஓங்கி இருப்பதற்கு அக்கட்சியின் முக்கிய நிர்வாகிகள் தான் காரணம். ஒன்றிய செயலாளர் பழனிவேல். மேற்படி ஒன்றிய செயலாளர் பழனிவேல் அவர்களின் பரிந்துரையின் பெயரில்தான் மல்லசமுத்திரம் திமுக ஒன்றிய இளைஞரணி செயலாளராக கிருபாகரன் அவர்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டது, அவருடன் கூட்டாளியாக இருக்கும் முத்துக்குமார் திருச்செங்கோடு திமுக ஒன்றிய இளைஞரணி செயலாளராக உள்ளார். கிருபாகரன் முத்துக்குமார் இருவரும் நண்பர்கள். நண்பர்கள் என்பதால் மல்லசமுத்திரம் மற்றும் திருச்செங்கோடு ஒன்றியத்தில் சட்டவிரோதமாக அள்ளப்படுகிற கிராவல் மற்றும் செம்மண் கடத்தலுக்கு இவர்கள் தான் முன்னணியாக இருக்கிறார்கள் இவர்கள் கூட்டணியால் தான் பாலமேடு கிராம நிர்வாக பெண் அலுவலர் கொலைவெறி தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் நடந்தேறியது. எங்கெங்கு மண் அல்ல முடியும் என்பதற்கும், அண்மையில் பாலமேடு ஊராட்சியில் கிராம நிர்வாக அதிகாரியை தாக்கிய பொழுது இதே கிருபாகரன் முத்துக்குமார் இருவரும் இருந்துள்ளனர்.

ஆனால் வாக்கு மூலத்தில் கிராம நிர்வாக அதிகாரி முத்துக்குமாரை முதன்மைப்படுத்தி வாக்குமூலம் அளித்திருந்தாலும் முத்துக்குமார் அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு இருப்பதற்கு நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கே,எஸ்,மூர்த்தியின் உறவினர் என்பது தான் காரணம். கிருபாகரன் வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறார், மக்கல் மாவட்ட ஆட்சி நிர்வாகம் கிராவல் மண், செம்மண் கொள்ளையர்களை இரும்பு கரம் கொண்டு ஒடுக்குமா என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாகவும், எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இதன் ஒரு பகுதியாக நாமக்கல் மாவட்டத்தில் பாலமேடு நிர்வாக அலுவலராக பணியாற்றி வரும் சிவகாமி என்பவர் மணல் கொள்ளை தடுக்க சென்ற போது மணல் கொள்ளையர்களான மொஞ்சனூர் சீனிவசான், கிருபா மற்றும் முத்துகுமார் ஆகியோர் சிவகாமி வீடு புகுந்து அவரை கொடூரமாக தாக்கி மணல் லாரி ஏற்றி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டல் விடுத்துள்ளனர்.

மேற்படி மணல் கொள்ளையர்களை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தும், வாகனங்களை பறிமுதல் செய்தும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உரிய பாதுகாப்பும், சிறப்பு அதிகாரம் வழங்க வேண்டி வலியுறுத்தி நாமக்கல் மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி மாபெரும் கண்ட ஆர்ப்பாட்டத்தை மாவட்ட ஆட்சியர் அலுவகம் முன்பு நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விசிக மத்திய மாவட்ட செயலாளர் நீலவானத்து நிலவன் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட விசிகவினர் கண்டன முழுக்கங்களை எழுப்பினர். இனிவரும் காலங்களில் மாவட்டத்தில் எந்தவொரு கிராம நிர்வாக அலுவலரும் தாக்கப்படக்கூடாது என்பதற்கு மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.



இராஜராஜன்





# மெகா ஊழல் கோவை மாஸ்டர் பிளான் 2041

'கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041' என்ற பெயரில் மெகா முறைகேட்டிற்கு வழிவகுக்கும் திமுக ஸ்டாலின் மாடல் அரசுக்கு கண்டனம் தெரிவித்துக் கொள்வதாகவும், தற்போது வெளியிட்டுள்ள கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041ன்படி, நகர ஊரமைப்புத் திட்டத்தில் இணைத்துள்ள பகுதிகளில் நிலவகைப்பாடு மாற்றங்களை மறு ஆய்வு செய்து, பொதுமக்களின் கருத்துக்கேட்புக் கூட்டங்களை முறையாக நடத்தி, அதன்படி திருத்தங்கள் செய்து புதிய கோயமுத்தூர் மாஸ்டர் பிளான் 2041ஐ வெளியிட வேண்டுமென அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இபிஎஸ் கூறுகையில் தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ள கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041 ல் நிலப் பரப்புகளை வேறு வகைப்பாட்டுக்கு மாற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது கோவை மக்களிடையே பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. நகர ஊரமைப்பு மற்றும் உள்ளூர் திட்டக் குழுமம் தயாரித்துள்ள கோவை மாவட்ட மாஸ்டர் பிளான் 2041ல் பல முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் வகையில் கோவை மாநகராட்சியுடன் 4 நகராட்சிகள், 21 பேரூராட்சிகள், 66 கிராம ஊராட்சிகள் உள்ளடக்கிய சுமார் 1531 சதுர கிலோ மீட்டருக்கு புதிய கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் வெளியிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் இந்த மாஸ்டர் பிளான் தயாரிப்பில் பொதுமக்களிடம் கருத்துக்கேட்புக் கூட்டம் முழுமையாக நடத்தப்படாமல், கூட்டத்தில் கருத்து வேறுபாடுகளும், சலசலப்புமும் ஏற்பட்டதால் கூட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் பல்வேறு குளறுபடிகளைக் கொண்ட மாஸ்டர் பிளான் வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே, குடியிருப்பு நில வகைப்பாட்டில் உள்ள நிலத்தினை விவசாயம் மற்றும் தொழில் பிரிவுக்கு மாற்றியுள்ளனர். ஏற்கெனவே வளர்ந்த தொழில் நகரமான கோவையின் நகரப் பகுதியில் நில மதிப்பீட்டுத் தொகை மிகவும் அதிகரித்துள்ள நிலையில், நில மாற்றம் செய்ய அனுமதி வழங்குவதன் மூலம் ஊழலுக்கு வழிவகை செய்வதுடன், பல்வேறு மோசடிகள் நடைபெறவும் வாய்ப்புள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது.

ஸ்டாலின் அரசு நில வகைப்பாடு மாற்றத்தில் ஆளும் திமுக குடும்ப உறுப்பினர்கள் நடத்தும் நிறுவனம் மற்றும் திமுக குடும்ப உறவுகளுக்கு மிகவும் நெருக்கமானவர்களின் நிலங்கள் என சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், குடியிருப்பு மனை நில வகைப்பாட்டிலேயே இருக்கும் வகையில், கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041ஐ, விஞ் ஞான முறையில் ஊழலுக்கு வித்திடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நில ஊழல் கடந்த 4 ஆண்டு காலத்தில் விவசாயிகளுக்கு எந்த உதவியும் செய்திடாத இந்த திமுக அரசு, பொதுமக்கள் கருத்துக்கேட்பு இன்றி, திட்டமிடப்படாத கிராமப் பகுதிகளையும் இணைத்து கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041 தயாரித்து குறிப்பிட்ட தரப்பினர் லாபம் ஈட்டும் வகையில் ஊழலுக்கு வழி ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அரசு ஏதோ சிறப்பாக செயல்படுவதுபோல் மாயத்தோற்றத்தை ஏற்படுத்த, இந்த மாஸ்டர் பிளான் மூலம் விடியா திமுக அரசு முனைகிறது என கோவை மக்களிடையே பரவலாக பேசப்பட்டு வருகிறது.

நகர திட்ட மோசடி இத்தகைய சூழ்நிலையில் அறிவிக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041ன்படி, நில வகைப்பாடு மாற்றங்களால் சுமார் 50,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படும் என்றும், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முறைகேடு நடைபெற வாய்ப்புள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041 எனவே, தற்போது வெளியிட்டுள்ள கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041 ன்படி, நகர ஊரமைப்புத் திட்டத்தில் இணைத்துள்ள பகுதிகளில் நிலவகைப்பாடு மாற்றங்களை மறு ஆய்வு செய்து, பொதுமக்களின் கருத்துக்கேட்புக் கூட்டங்களை முறையாக நடத்தி, அதன்படி திருத்தங்கள் செய்து புதிய கோயமுத்தூர் மாஸ்டர் பிளான் 2041ஐ வெளியிட இந்த திமுக ஸ்டாலின் மாடல் அரசை வலியுறுத்துகிறேன்'' என கூறியுள்ளார்.



# கொலைகளமாக மாறிவரும் வேலூர் அரசு மருத்துவமனை

வேலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சையில் மருத்துவர்கள் யாரும் இல்லாததால் முகம் சிதைந்த நிலையில் மூன்று மணி நேரத்துக்கும் மேலாக மருத்துவம் பார்க்காத அவல நிலை. மூன்று மணி நேரத்துக்குப் பிறகு மருத்துவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின் ஸ்கேன் செய்து மேல் சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவமனை அலட்சியத்தால் மூன்று மணி நேரத்துக்கு பிறகு உயிர் பிழைப்பது கடினம் என தெரிவித்த மருத்துவர்கள் சோகத்தில் ஆழ்ந்த உறவினர்கள்.

இராணிப்பேட்டை மாவட்டம், கலவை நல்லூர் பகுதியை சேர்ந்த ரத்தினம் சுசிலா இவர்களுக்கு மூன்று மகள் மற்றும் உதயகுமார் (35) என்ற மகன் உள்ளனர். இவருக்கு திருமணம் ஆகி 7 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது.

இந்நிலையில் உதயகுமார் இராணிப்பேட்டை நீதிமன்றம் அருகே உள்ள (பேரி) தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவர் இரவு பணியை முடித்துக் கொண்டு அவரது இருசக்கர வாகனத்தில் கலவையில் உள்ள வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். அப்போது நாகநரி பகுதியில் உள்ள வளைவில் வந்த நெல் பயிர்களை அறுவடை செய்யும் இயந்திரம் வாகனம் வளைவு பாதையில் வேகமாக வந்துள்ளது. அதில் முன்பு மோதிய உதயகுமாரின் முகம் முழுவதும் சிதைந்து போய் ரத்த வெள்ளத்தில் மயங்கி கீழே விழுந்து உள்ளார். பின்பு அங்கிருந்த பொதுமக்கள் காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் 108 ஆம்புலன்ஸை வரவைத்து கலவை அருகே உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில். கலவை மருத்துவமனையில் போதிய சிகிச்சை அளிக்க முடியாத காரணத்தால் மேல் சிகிச்சைக்காக வேலூர் மாவட்டம் அடுக்கம்பாறையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர.

இரவு அரசு மருத்துவமனையில் உள்ள அவசரப் பிரிவில் முதலுதவி அளிப்பதாக முகம் முழுவதும் பஞ்சியை வைத்து கட்டு போட்டுவிட்டு ஆக்சிஜன் பொருத்திவிட்டு முறையாக செய்யாமல் சென்றுள்ளனர். பின்பு பல மணி ஆகியும் அதாவது மூன்று மணி நேரத்துக்கு மேலாக எந்த செவிலியர்களும் மருத்துவர்களும் யாரும் வந்து பார்க்கவில்லை. அவசர பிரிவில் ஒரு மருத்துவரும் இல்லாததால் மிகவும் அவதி அடைந்து வந்துள்ளனர்.

ஒரு அவசர சிகிச்சை அறையில் இது போன்ற நிலை இருந்தால் சிகிச்சை பெற்று வரும் நபரின் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படும் அபாயம் இருப்பதாக அச்சம் அடைந்துள்ளனர்.

மருத்துவம் பார்க்க போதிய பண வசதி இல்லாததால் அரசு மருத்துவமனையை நம்பி வருகிறோம் ஆனால் தரமற்ற முறையில் இருப்பதால் எப்படி நம்பி அரசு மருத்துவமனை நம்பி வருவது என வேதனையுடன் வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பரப்பி உள்ளனர்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட நபர்கள் மருத்துவமனிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு கேட்டபோது அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை அறையில் போதிய படுக்கை வசதி இல்லாததால் மற்றொரு அவசர பிரிவு அறையில் வைக்கப்பட்டு உள்ளது,

ஆகவேதான், இது போன்ற நிலை ஏற்பட்டுள்ளது எனவும் போதிய மருத்துவர்கள் இல்லாததால் தாமதம் ஏற்பட்டுள்ளது என கூறியுள்ளனர்.

அதேபோன்று அவருக்கு ஸ்கேன் செய்ய வேண்டும்,சிகிச்சை பெற்று வரும் நபரை ஸ்கேன் செய்யும் அறைக்கு கொண்டு செல்ல வேண்டும் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஆக்சிஜன் பொருத்தப்பட்டுள்ளது.

அதை எடுத்தால் அவருக்கு மாரடைப்பு ஏற்படலாம் என பயம் கொடுக்கும் வகையில் சம்பந்தமில்லாமல் கூறப்பட்டதாக தெரிகிறது.

வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின்பு ஸ்கேன் செய்து முகம் முழுவதும் சிதைந்து இருப்பதால் இங்கு சிகிச்சை அளிக்க முடியாது உயிர் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுப்பி வைக்கிறோம். அங்கு சென்று மருத்துவம் பார்த்துக் கொள்ளுங்கள் என அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்துள்ளனர். மருத்துவமனைக்கு வந்தவுடன் தெரிவித்திருந்தால் உடனடியாக சென்னைக்கு சென்று இருந்திருக்கலாம் என உறவினர்கள் வேதனையுடன் தெரிவித்து வருகின்றனர்.

இது போன்ற சிரமங்களை வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் சிலர் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறார்கள். இதனால் சிகிவ்ச்சைக்கு வரும் ஏழைகள் இறப்பை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்து அனைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமாரின் பார்வைக்கு சென்ற பின்னர் அவர் நேரடியாக மருத்துவமனைக்கு சென்று விசாரித்து டீனிடம் எடுத்துரைத்தார்.

அப்போது அந்த டீன் சட்டமன்ற உறுப்பினரை திர்சை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டாரே தவிர அவர் சொன்ன குறைகளை சீர் செய்து கொள்ளவேயில்லை. அதன் வெளிபாடே இகலவை வாலிபருக்கு ஏற்பட்ட நிலை.

ம.பா. கெஜராஜ்





## செங்கோட்டையன் அதிமுகவுக்கு முழுக்கு?

# பிஜேபி-யில் இணைகிறார் !

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணத்தை வடிவமைத்தவர் செங்கோட்டையன். மகாபாரதத்தில் எப்படி அர்ஜுனனுக்கு சாரதியாக கர்ணன் இருந்தாரோ அதேபோல் ஜெயலலிதாவிற்கு செங்கோட்டையன் சாரதியாக இருந்து வந்தார். ஜெயாவின் தமிழகம் முழுக்க அவருடைய தேர்தல் பிரச்சாரங்கள் வடிவமைத்து கொடுத்து வந்தார்.

இந்நிலையில் தற்போது அதிருப்தியில் உள்ள முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், 5ந்தேதி மனம் திறந்து பேசப்போகிறேன் என்று தெரிவித்துள்ளார். அப்படியிருக்க அவர் அதிமுகவில் இருந்து விலக முடிவு செய்திருப்பதாக தகவல்கள்.

அப்படி அவர் வெளியேறினால் பாஜகவில் இணையக்கூடும் என்றும், திமுக அல்லது தவெகவில் இணையக்கூடும் என்று பேசப்படுகிறது. அதிமுகவின் மிக மூத்த தலைவர்களில் செங்கோட்டையனும் ஒருவர். அவர்,எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்தே செங்கோட்டையன் அதிமுகவில் பயணிக்கிறார். அதிமுகவில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்த செந்தில் பாலாஜி கொங்கு மாவட்டங்களின் பொறுப்பாளராக செயல்பட்டு வருகிறார். ஒருவேளை செங்கோட்டையன் திமுகவில் இணைந்தால் அவரை விட ஜுனியரான செந்தில் பாலாஜியின் கீழ் செயல்படவேண்டிய நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆதலால் செங்கோட்டையன் திமுகவில் இணைவதற்கான வாய்ப்பு மிக குறைவே.

அதிமுக பாஜக கூட்டணி உறுதியாவதற்கு முன்பே டெல்லி வரை சென்று மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை செங்கோட்டையன் சந்தித்து பேசினார். அதிமுக பாஜக கூட்டணி உறுதியான பின்பு செங்கோட்டையனுக்கு, கட்சியில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. அதிமுக பாஜக கூட்டணி இல்லையென்றால் கூட செங்கோட்டையன் பாஜகவில் இணைவதற்கு சாத்தியம் இருந்திருக்கும்.

ஆகவே கூட்டணியால் இப்போது பாஜகவிற்கு செங்கோட்டையன் செல்ல வாய்ப்பு மிக மிக குறைவே, அதற்கு அவர் அதிமுகவிலேயே இருந்துவிடலாம். செங்கோட்டையன் அதிமுகவில் இருந்து விலகி தனிக்கட்சி தொடங்கினால், திமுக, அதிமுகவை மீறிப் பிரகாசிப்பது கடினம், ஆதலால் அந்த முடிவை செங்கோட்டையன் எடுப்பதற்கான வாய்ப்பு இல்லை. வளர்ந்து வரும் கட்சியாக உள்ள த.வெ.க.வில் செங்கோட்டையன் இணைந்து பயணிக்க வாய்ப்புள்ளது. எதற்கும் வரும் 5 ஆம் தேதி வரை காத்திருப்போம்.

# நாமக்கல் மாவட்டத்தில் இபிஎஸ் சுற்றுப்பயணம்

வரும், 2026 சட்டசபை தேர்தலை முன்னிட்டு, மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற தலைப்பில், கட்சி பொதுச்செயலாளரும், சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான இ.பி.எஸ்., தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொண்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அந்தவகையில், நாமக்கல் மாவட்டத்தில், வரும், 18, 19, 20 ஆகிய மூன்று நாட்கள் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். தினமும், மூன்று தொகுதிகள் சென்றால்தான், அக்டோபர் பாதியில் தமிழகத்தில் உள்ள முழு தொகுதிகளிலும் சுற்றுப்பயணத்தை முடிக்க முடியும்.

முதல் நாளான, வரும் 18ம் தேதி, ராசிபுரம், சேந்தமங்கலம் சட்டசபை தொகுதியிலும் 19ல், நாமக்கல், ப.வேலூர் தொகுதியிலும், 20ம் தேதி திருச்செங்கோடு, குமாரபாளையம் தொகுதியிலும் அவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அவர் செல்லும் இடங்களில் எல்லாம், பொதுமக்கள் சாரை சாரையாக வருகின்றனர். இதைப் பார்க்கும்போது, 2026ல், இ.பி.எஸ்., தலைமையில் பொற்கால ஆட்சி அமைப்போம் என, மக்கள் முடிவு செய்துள்ளனர் என்பதையே காட்டுகிறது.

கடந்த மக்களவைதேர்தலில், அனைவரும் கடினமாக உழைத்த காரணத்தால்தான், மிக குறைந்த ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிவாய்ப்பை இழந்தோம். வரும் காலத்தில், நிச்சயமாக நல்ல கூட்டணி அமையும்.

## செய்தியாளர்கள் புறக்கணிப்பு

நாமக்கல் மாவட்ட அதிமுக அலுவலகத்தில் கட்சி ரீதியான கூட்டங்களுக்கு நாமக்கல் பத்திரிக்கை நிருபர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஒரு சில மீடியாக்கள் மற்றும் நாளிதழ்கள் மட்டுமே தகவல் சொல்லப்படுகிறது. மற்ற எந்த பத்திரிக்கையாளர்களுக்கு முறைப்படி அழைப்பு விடுப்பதில்லை. நாமக்கல்லில் உள்ள தகவல் தொழில்நுட்ப பிரிவு என்ன செய்து கொண்டு இருக்கிறது.

மற்ற கட்சிகளிலில் அனைத்து பத்திரிக்கையாளர்களுக்கும் அழைப்பு விடுக்கும் போது அதிமுகவில் மட்டும் ஏன் செய்யவில்லை. அப்படியென்றால் நிருபர்களை புறக்கணிப்பு செய்கிறது அதிமுக.

பூங்குன்றன்



# அண்ணன் விஜயகாந்த் வாக்குகளை பெறுவாரா விஜய்?

மதுரை தவெக மாநாட்டில் விஜயகாந்தை 'அண்ணன்' என்று குறிப்பிட்டு விஜய் புகழ்ந்து பேசியது தேமுதிக வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. விஜயகாந்தை அண்ணன் என்று விஜய் குறிப்பிட்டது சந்தோஷம் தந்தாலும் அரசியல் நோக்கத்தில் அவரது பெயரை பயன்படுத்துவதை ஏற்க முடியாது என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

விஜய் தனது பேச்சு மூலம் விஜயகாந்தின் வாக்கு வங்கிக்கு குறிவைக்கிறாரா? இதுகுறித்த பிரேமலாதாவின் விமர்சனத்துக்கு தவெக பதில் என்ன? விஜயின் தவெகவுடன் தேமுதிக கூட்டணி வைத்தால் என்ன நடக்கும்?

ஆகஸ்ட் 21ம் தேதி மதுரையில் பேசிய விஜய், "எம்ஜிஆருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் எம்ஜிஆரைப் போன்ற குணம் கொண்ட விஜயகாந்துடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரும் மதுரையைச் சேர்ந்தவர்தான், அவரை மறக்க முடியாது" என்று கூறினார்.

விஜயகாந்தை தனது 'அண்ணன்' என்று விஜய் குறிப்பிட்டதை முதலில் வரவேற்றாலும், "விஜயகாந்த் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. லட்சம் கேப்டன்களை அவர் உருவாக்கியுள்ளார். எங்கள் வாரிசுகள் இருக்கிறார்கள், எங்கள் நிர்வாகிகள், தொண்டர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது வேறு யாரோ அதை வந்து பயன்படுத்திக் கொள்வதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், தேமுதிக ஏற்றுக்கொள்ளாது" என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

விஜயின் பேச்சு, கடந்த தேர்தல்களில் விஜயகாந்த் பெற்றுவந்த திமுக, அதிமுக அல்லாத வாக்குகளை குறிவைத்ததாகவே பார்க்கப்படுகிறது. விஜய் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கிய பின்னர் திரைக்கு வந்த 'கோட்' (GOAT) திரைப்படத்தில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைக் கொண்டு விஜயகாந்தை தோன்றச் செய்தார். இதற்கான அனுமதியை பிரேமலதா விஜயகாந்தை நேரில் சந்தித்துப் பெற்றிருந்தார் விஜய். விஜயகாந்த் மறைந்த பிறகு, அந்தப் படத்தின் மூலம் ரசிகர்கள் அவரைத் திரையில் காணும் வாய்ப்பு கிடைத்தது. இப்போது, அரசியல் மேடையில் நேரடியாக விஜயகாந்த் பெயரை அவர் பயன்படுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் 2011ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்குப் பிறகு எதிர்க்கட்சி அந்தஸ்துக்கு உயர்ந்த தேமுதிகவின் வாக்கு சதவிகிதம், அதன் பிறகு படிப்படியாக குறைந்தது. விஜயகாந்த் உடல்நலக் குறைவால் மறைந்த பிறகு அது மேலும் சரிந்துவிட்டது.

கடந்த2024 நாடாளுமன்ற தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி வைத்த தேமுதிக எந்தத் தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. விருதுநகர் தொகுதியில் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் இரண்டாம் இடம் பிடித்தார். அத்தேர்தலில் தேமுதிகவின் வாக்கு சதவிகிதம் 2.59%.

1993ஆம் ஆண்டு விஜய் கதாநாயகனாக நடித்த 'செந்தூரப் பாண்டி' என்ற திரைப்படத்தில் விஜயகாந்த் ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். திரைப்படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்து வந்த விஜய், 'நாளைய தீர்ப்பு' படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகி ஓராண்டே ஆகியிருந்த நிலையில், செந்தூரபாண்டி வெளியானது. அப்போது பெரும் ரசிகர் கூட்டத்தைக் கொண்டிருந்த விஜயகாந்த், விஜயின் தந்தை எஸ். ஏ. சந்திரசேகர் இயக்கிய அந்தப் படத்தில் விஜயின் அண்ணன் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இதைக் குறிப்பிட்டுப் பேசிய பிரேமலதா விஜயகாந்த், "விஜயை எங்களுக்குச் சிறு வயதிலிருந்தே தெரியும். அவரது 'செந்தூரப் பாண்டி' படத்தில் கேப்டன் நடித்துக் கொடுத்தார். இன்று அவர் நன்றாக வளர்ந்திருக்கிறார், வாழ்த்துகள். எஸ். ஏ. சந்திரசேகருடன் இணைந்து கேப்டன் 17 படங்களில் பணியாற்றியுள்ளார். அதே சமயம், விஜயகாந்த் அவர்களின் பெயரை கேப்டனின் வாக்குகளைப் பிரிப்பதற்காகச் சொல்கிறாரா? கேப்டனின் புகைப்படங்களைப் பயன்படுத்துகிறாரா







என்றால், எங்கள் கட்சி 20 ஆண்டுகளாக செயல்படும் கட்சி. தமிழ்நாடு முழுவதும் தொண்டர்கள் இருக்கிறார்கள். கேப்டனுக்கு நிகர் கேப்டன்தான். இதை அவர்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும். எங்கள் நிர்வாகிகள், தொண்டர்கள், ஐ.டி. பிரிவினர் சரியான பதிலடி கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். உண்மை நிலையை அவர்களும் உணரட்டும்.'' என்று கூறினார்.

விஜயகாந்த் ஒரு கட்சிக்கானவர் அல்ல என்று கூறுகிறார், தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் லயோலா மணி. அவர் கூறுகையில், ''விஜயகாந்தை ஒரு கட்சிக்கானவராக பார்ப்பது தவறு. அவர் சாதி, மதம், அரசியல் ஆகியவற்றைக் கடந்த ஒரு நல்ல பண்புள்ள ஆளுமை. எங்கள் தலைவருக்கும் அவருக்கும் இருந்தது அண்ணன்தம்பி உறவு'' என்றார்.

உறவு வேறு, அரசியல் வேறு என்று கூறுகிறார் பிரேமலதா விஜயகாந்த் ''கேப்டனை அண்ணன் என்று மேடையில் சொல்கிறார், சந்தோஷம். அவர் அண்ணன் என்றால், நாங்கள் அவரைத் தம்பி என்று கூறுகிறோம். அவ்வளவுதான். அதற்காக எங்கள் வாக்குகளை அவர் எடுத்துக் கொள்கிறார் என்றால், அதை மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், தேமுதிக தொண்டர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.'' என்கிறார் அவர்.

தேமுதிகதவெக கூட்டணி சாத்தியம் பற்றிக் கேட்டதற்கு, டிசம்பர் மாதத்துக்குப் பிறகே அது குறித்துத் தெரியும் என்று தெரிவித்தார். என்றார்.

''எங்கள் தலைவர் விரைவில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார். கூட்டணி குறித்த அனைத்து முடிவுகளையும் எடுக்கும் அதிகாரத்தைச் செயற்குழு, பொதுக்குழு கூடித் தலைவரிடம் கொடுத்துள்ளோம். எனவே, டிசம்பர் மாதத்துக்குப் பிறகு அது குறித்த செய்திகள் வெளிவரும்'' என்றார்.

மேலும் அவர் ''விஜயகாந்த் விஜய் உறவை நாங்கள் அரசியலுக்காகப் பயன்படுத்தவில்லை. விஜயகாந்த் மக்களின் அன்பைப் பெற்றவர், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர், அனைவராலும் கொண்டாடப்படக் கூடியவர். விஜயகாந்தும் எம்.ஜி.ஆர். ரசிகர், எங்கள் தலைவரும் எம்.ஜி.ஆர். ரசிகர். அவரை அரசியல் குறியீடாக மட்டுமே பார்ப்பது தவறு. அரசியல் களத்தில் எழுப்பப்படும் அவதூறுகளுக்கும் பொய்களுக்கும் பதில் சொல்ல முடியாது'' என்றார்.

திரைப்பட ரசனை வேறு, அரசியல் வேறு என்கிறார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தேமுதிக தலைமை நிலையச் செயலாளருமான ப. பார்த்தசாரதி. அவர் கூறுகையில், ''கேப்டன் அரசியலுக்கு வந்த பிறகு நடிக்கவில்லை. அவருக்கு இருந்த ரசிகர் பட்டாளத்தில் திமுக, அதிமுக என இரண்டு கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். 2005ல் தேமுதிக தொடங்கிய போது, ரசிகர் மன்றங்களில் இருப்பவர்கள் வேறு கட்சிகளிலிருந்து ராஜினாமா செய்துவிட்டுத் தனது கட்சியில் இணைய அழைப்பு விடுத்தார். அதேபோல, விஜய்க்கும் அனைத்துக் கட்சிகளிலும் ரசிகர்கள் இருப்பார்கள் என்பது இயல்புதான்'' என்று கூறினார்.

அதே சமயம் தேமுதிக வாக்குகள் விஜய்க்கு மாறாது என்றும் அவர் கூறினார். ''கேப்டன் மீது விஜய்க்கு மட்டுமல்ல, சூர்யா, விஷால் என திரை உலகில் உள்ள பலருக்கும் நல்ல மதிப்பு உண்டு. எங்கள் பொதுச் செயலாளர் கூறியது போல, விஜய்யை நாங்கள் ''எங்கள் வீட்டுப் பிள்ளை''யாகப் பார்க்கிறோம். 'செந்தூரப் பாண்டி' படத்தில் விஜய்க்கு விஜயகாந்த் அண்ணனாக நடித்திருந்தார். அதுதான் அவர்களுக்கிடையிலான உறவு. விஜய்க்கு அவர் மீது மிகுந்த மரியாதை உண்டு. அதனால் தேமுதிக வாக்கு அவருக்கு மாறப் போவதில்லை.'' என்றார்.

தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமையுமா என்று கேட்டதற்கு, ''நாங்கள் திமுக, அதிமுக, பாஜக என எந்த கட்சியுடனும் கூட்டணி இருக்கும் என்றோ, இல்லை என்றோ இப்போது கூறவில்லை. ஜனவரி மாதத்துக்குப் பிறகே அறிவிப்பு வெளியாகும்'' என்றார் பார்த்தசாரதி.

''தற்போது விஜயகாந்தின் வாக்கு வங்கியை யார் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலைதான் உள்ளது. அதைப் பயன்படுத்திக்கொள்ள விஜய் நினைக்கிறார். அதைத் தடுத்து நிறுத்தும் நிலையில், பிரேமலதா விஜயகாந்த் இல்லை. விஜயகாந்தின் வாக்குகள் விஜய் பக்கம் திரும்பிவிடலாம் என்ற தேமுதிகவின் பயம் நியாயமானது'' என்று கூறுகிறார் மூத்த அரசியல் நிபுணர்.

அவர் மேலும் கூறுகையில், ''விஜயகாந்தின் வாக்காளர்கள் பெரும்பாலும் அவரது ரசிகர்களே; குறிப்பாக 40 அல்லது 50 வயதுக்கு மேற்பட்டவர்கள். விஜயகாந்த் இல்லாத இந்தச் சூழலில், அவரது மகன்களால் அந்த இடத்தை நிரப்ப முடியவில்லை. இளம் வாக்காளர்களின் ஆதரவு குறித்து விஜய் நம்பிக்கையுடன் இருக்கிறார். ஆனால் நகர்ப்புற, படித்த, முதியவர்கள் மத்தியில் விஜய்க்குப் போதிய ஆதரவு இல்லை. தேர்தல் என்று வரும்போது அனைத்துத் தரப்பினரின் வாக்குகளும் தேவை. தற்போதைக்கு அப்படியான ஆதரவு தமிழ்நாட்டில் திமுகவுக்கு மட்டுமே இருக்கிறது. அதிமுக அதில் இரண்டாம் இடத்தில் இருக்கிறது என்று கூறலாம்'' என்றார்.

தேமுதிக - விஜய் கூட்டணி அமைப்பது தற்கொலைக்குச் சமம் என்கிறார் ''தேமுதிக எந்தப் பக்கம் செல்வது என்று பிரேமலதா விஜயகாந்த் இன்னும் முடிவு செய்யவில்லை. அதேநேரம், விஜயுடன் செல்வது தற்கொலைக்குச் சமமாக இருக்கும்; விஜயகாந்தின் வாக்குகளை அவர்களே எடுத்து விஜய்க்கு வழங்குவது போல் இருக்கும்.'' என்பதாக இருக்கும்.

Tharasu Fortnightly Registered of News Papers of india TNTAM 23608/2018



# ஐம்பது சதவிகிதம் வரிவிதிப்பால் என்ன தொழிலுக்கு என்ன பாதிப்பு ! முட்டை ஏற்றுமதிக்கு பாதிப்பா?



கடந்த சில மாதங்களில் பல்வேறு கட்டங்களாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருட்கள் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் 48.2 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருட்கள் அமெரிக்காவின் வரி விதிப்புக்கு உள்ளாகும் என கணக்கிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் வரி விதிப்பால் பல்வேறு துறைகளின் உற்பத்தி பாதிக்கப்படும் என வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

50% வரிவிதிப்பு என்பது எதிர்பாராத ஒன்று தான் எனப் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால், முதலில் அறிவிக்கப்பட்ட 25% வரிவிதிப்பை தவிர்க்க முடியாது என்பதே அனைவரின் ஒருமித்த கருத்தாகவும் உள்ளது. பேச்சுவார்த்தை மூலம் உயர்த்தப்பட்ட 50% என்பதை 25% ஆக இறுதி செய்ய முடியும் என்றே அனைவரும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

நாளை 50% வரிவிதிப்பு அமலுக்கு வரவுள்ள நிலையில் தமிழ்நாட்டில் இதனால் தாக்கம் ஏற்படப் போகும் 5 துறைகள் என்னென்ன என்பதை இங்கே பார்க்கலாம்: டிரம்ப் நிர்வாகம் கடந்த ஏப்ரல் மாதம் ஐபோன்கள், கணினிகள் மற்றும் இதர மின்னணு பொருட்களுக்கு பரஸ்பர வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்துள்ளது. உலகில் உற்பத்தி செய்யப்படும் ஐந்தில் ஒரு ஐபோன் தற்போது இந்தியாவிலிருந்து தான் செல்வதாகவும் சமீபத்தில் அமெரிக்காவுக்கு ஐபோனை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா சீனாவை பின்னுக்குத் தள்ளிவிட்டதாகவும் ப்ளூம்பர்க் செய்தி தெரிவிக்கிறது. கோவையில் இருந்து அமெரிக்காவுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.4,000 கோடிக்கு உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி ஆகின்றன, அமெரிக்க வரி விதிப்பால் கோயம்புத்தூரின் பொறியியல் ஏற்றுமதி கடுமையாகப் பாதிக்கப்படும் என்கிறார் கொடிசியா அமைப்பின் தலைவரான கார்த்திகேயன். கோவையிலிருந்து அமெரிக்காவுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.4,000 கோடி மதிப்பிலான உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க வணிகர்கள் இறக்குமதி வரியில் ஒரு பகுதியை இந்திய உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நிர்பந்திப்பதாகக் கூறுகிறார் கார்த்திகேயன், “ஏற்றுமதியாகும் பொறியியல் உதிரி பாகங்கள் போன்ற பொருட்களின் லாப வரம்பு என்பது சராசரியாக 10% என்பதாகத் தான் இருக்கும். தற்போது 25% வரி உள்ள நிலையில் அதில் பாதியை (12.5%) கோவை உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அமெரிக்க வணிகர்கள் நிர்பந்திக்கின்றனர், இது நமக்கு கட்டுப்படியாகாது” என்றார். இந்த வரி விதிப்பால் புதிய உற்பத்தி ஆர்டர்கள் வருவது நின்றுவிட்டது என்றும் தெரிவித்தார் கார்த்திகேயன்.

உதிரி பாகங்களுக்கு இந்தியாவை தான் அமெரிக்க உற்பத்தியாளர்கள் அதிகம் சார்ந்திருப்பதாகக் கூறும் கார்த்திகேயன், “அமெரிக்காவின் பல முக்கிய உற்பத்தி நிறுவனங்களுக்கு கோவையில் கிளைகள் உள்ளன. கோவையிலிருந்து நேரடியாக மட்டுமல்லாமல் மறைமுகமாகவும் (மூன்றாம் நாடுகள் மூலமாக) உற்பத்தி பொருட்கள் அமெரிக்க சந்தைக்கு செல்கின்றன.” என்றார். அமெரிக்க வரி விதிப்பால் ஐடி துறைக்கு நேரடி பாதிப்பு இருக்காது என்கிறார், எஃப்ஐசிசிஐ அமைப்பின் தொழில்நுட்ப பிரிவு தலைவரான ராஜாராம் வெங்கட்ராமன். இந்தியாவின் ஐடி ஏற்றுமதியில் 50% அமெரிக்காவைச் சார்ந்திருக்கிறது என்று கூறிய ராஜாராம், “ஐடி சேவை துறைகளின் கீழ் வருவதால் அமெரிக்க வரி விதிப்பு இதற்கு பொருந்தாது. ஆனால் அவற்றின் வருமானத்தில் சிறிய தாக்கம் இருக்கும்“ என்று தெரிவித்தார்.

“வர்த்தகம் பாதிக்கப்படுவதால் நாணயத்தின் மதிப்பு ஏறி இறங்கும். ஐடி நிறுவனங்கள் ‘ஃபார்வார்ட் கான்ட்ராக்ட்’ என்கிற முறையில் ஒப்பந்தங்கள் செய்கின்றன. அதன்படி நிலையான டாலர் மதிப்பை வைத்து ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும். இத்தகைய சூழலில் டாலர் மதிப்பு கூடினால் நிறுவனங்களின் வருவாய் பாதிக்கப்படும்“ என்றார்.

ஐடி துறையைப் பொருத்தவரை இந்த வரி விதிப்பு என்பது இருமுனை கத்தியைப் போன்றது என்று கூறும் ராஜாராம், இதன் மூலம் நன்மைகளும் கிடைக்கலாம், சில பாதிப்புகளும் ஏற்படலாம் என்றார். “அமெரிக்காவுக்கும் சரி, இந்தியாவுக்கும் சரி மாற்று சந்தைகள் உள்ளன. நாம் நமது உள்நாட்டு ஐடி துறையை வளர்க்க வேண்டும். அதேபோல், அமெரிக்காவை மட்டும் ஏற்றுமதிக்கு அதிகம் சார்ந்திருக்காமல் மாற்று சந்தைகளையும் உருவாக்க வேண்டும்“ என்றார்.

திருப்பூரின் வருடாந்திர ஜவுளி உற்பத்தி ரூ.70,000 கோடி, அமெரிக்க வரி, தமிழ்நாட்டின் ஜவுளித்துறை சங்கிலியில் திருப்பூர் மிக முக்கியமான இடம் வகிக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.12,000 கோடி மதிப்பிலான பொருட்கள் இங்கிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக கூறுகிறார், திருப்பூர் ஏற்றுமதியாளர் அமைப்பின் தலைவரான கே.எம்.சுப்ரமணியன். திருப்பூர் ஜவுளி உற்பத்தி பொருட்களின் பெரிய ஒற்றை இறக்குமதியாளராக அமெரிக்கா உள்ளது என்கிறார் சுப்ரமணியன். “திருப்பூரிலிருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டாலும் அமெரிக்கா தான் மிகப்பெரிய சந்தையாக உள்ளது.” என்றார். ஜவுளி உற்பத்தியைப் பொருத்தவரை ஆர்டர் பெறப்பட்டதிலிருந்து பொருட்கள் உற்பத்தியாகி வழங்கப்படுவது வரை அந்த சுழற்சிக்கு சராசரியாக 120 நாட்கள் எடுத்துக்கொள்ளும்.

இதர சந்தைகளுக்கு வணிகத்தை விரிவுபடுத்தும் திட்டத்தில் ஏற்றுமதியாளர்கள் உள்ளதாக தெரிவித்தார் சுப்ரமணியன், “வரி விதிப்பில் சாதகமான முடிவு கிடைத்தாலும் அது நீண்டகால நோக்கில் வணிகத்தை பாதிக்கும். அதனால் ரஷ்யா, ஆஸ்திரேலியா, யூஏஇ போன்ற இதர சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப் பார்க்கிறோம். இதற்கு ஓர் ஆண்டு காலம் பிடிக்கும். அதன் பின் இழப்புகளை சமாளிக்க முடியும்“ என்றார்.

தமிழ்நாட்டின் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில் முட்டை மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. ஆனால் அமெரிக்க வரி விதிப்பால் முட்டை ஏற்றுமதிக்கு பெரிய அளவில் பாதிப்பு இருக்காது என்கிறார் முட்டை ஏற்றுமதியாளர், கால்நடை விவசாயிகள் வர்த்தகச் சங்க பொதுச்செயலாளர் மற்றும் தமிழக காங்கிரஸ் ஓபிசி ஊடக பிரிவின் மாநில செயலாளர் டாக்டர் செந்தில். “நாம் பாரம்பரியமாக வளைகுடா நாடுகளுக்கு தான் அதிக ஏற்றுமதி செய்கிறோம். அமெரிக்க சந்தைக்கு கடந்த சில ஆண்டுகளாக தான் ஏற்றுமதி செய்கிறோம். அமெரிக்காவில் முட்டைக்கு அதிக அளவிலான தேவை இருக்கிறது. இந்திய முட்டைகள் அங்கு பல மடங்கு அதிக விலைக்கு விற்பனையாகின்றன என்றார்.

